சி.சி.எண். 550/2023. நாள் 10.06.2024

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –

அசா.2.ஹரிஸ்தா , த/பெ. வீரமணி

( எதிரி ஆஜர் )

1. நான் 12 ம் வகுப்பு முடித்துள்ளேன். அ.சா.1 கீதாலட்சுமி எனது தாயார் ஆவார். மாலை 06.30 மணியளவில் போத்தீஸில் ட்ரெஸ் எடுத்துக்கொண்டு இரவு 07.50 மணியளவில் ஆண்டாள் தியேட்டர் அருகே வந்தபோது சம்பவம் நடந்தது. சம்பவ இடத்தில் இருந்து மடவார் வளாகம் ஆர்ச் வரை இடது பக்கத்தில் தெருவிளக்குகள் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து மடவார் வளாகம் ஆர்ச் வரை இடது பக்கத்தில் குடியிருப்பு வீடுகள், கடைகள் உள்ளது என்றால் சரிதான்.

2. ரோட்டின் இடது பக்கத்தில் சிவன் கோவிலுக்கு பக்தர்கள்சென்று கொண்டிருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவ இடம் ஆள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். கல் மண்டபத்திற்கு தெற்கு பக்கத்தில் உள்ள சாலை தென்காசி செல்லும் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். ஆண்டாள் கோவில் கல் மண்டபத்தில் இருந்து எதிரி எங்களை பின்தொடர்ந்து வந்தார். எனது தாயாரிடம் சொல்வதற்காக திரும்பும் போது நான் அணிந்திருந்த செயினை எதிரி அறுத்துக்கொண்டு சென்றுவிட்டார்.

3. நாங்கள் சத்தம்போடவும், எதிரி அவர் வந்த பாதையிலேயே சென்றுவிட்டார். அருகில் இருந்தவர்கள் கூட்டமாக கூடிவிட்டனர். கூட்டத்தில் இருந்தவர்கள் எதிரியை விரட்டினார்கள். ஆனால் அவர் ஓடிவிட்டார். அ.சா.5 ஐ கூப்பிடுவதற்காக நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம். அவரிடம் தகவல் தெரிவித்துவிட்டு இரவு 09.30 மணியளவில் காவல் நிலையம் சென்றோம். சங்கர்ராமன் சொல்லி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அ.சா.3, அ.சா..4 ஆகியோர்கள் எங்களுடன் காவல் நிலையம் வந்திருந்தார்கள் என்றால் சரிதான்.

4. புகார் மனுவில் அ.சா.3, 4, 5 ஆகியோர்கள் சாட்சிகளாக கையெழுத்திட்டுள்ளனர் என்றால் சரிதான். சம்பவ நேரம் இருட்டான பகுதி என்பதால் எதிரியை குறிப்பிட்டு அடையாளம் காட்ட இயலாது என்றால் சரியல்ல. சம்பவம் இரவு நேரம் என்பதால், எதிரி அணிந்திருந்த உடைகளின் நிறம் பற்றி என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரியல்ல. மறுநாள் காவல் நிலையம் சென்று அ.சா.ஆ 2 முதல் 5 வரையிலானவைகளை பார்த்து அதன் பிறகு புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. காவல் நிலையத்தில் போலீசார் எதிரியை அடையாளம் காட்டியதன் அடிப்படையில் தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. முதல் நாள் சம்பவத்தில் நான் எதிரியை பார்த்திருந்ததால், அவரை அடையாளம் காட்டினேன். சம்பவ இடத்தில் எதிரியை நான் பார்க்கவில்லை என்றும், போலீசார் சந்தேகத்தின் பேரில் பிடித்திருந்த எதிரியை தவறாக அடையாளம் காட்டியுள்ளேன் என்றும், எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

6. எனது தாயார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் திருடுபோன பொருட்களை திரும்ப பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.